**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு.எண் 100/2022**
**நாள் 06/12/2024 வெள்ளிக்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878 ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – கணேசன் | த/பெயர் – அருணாச்சலம் |
| வயது – 57 | தொழில் – |
| விலாசம் – எண் 2/32, வடக்கு தெரு, சின்னம்பேடு கிராமம், பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். | |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

ராஜேஸ்வரி எனது அம்மா ஆவர். கடன் உறுதி சீட்டின் கீழ் பணம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். ரூபாய் 60,000/– மற்றும் ரூபாய் 50,000/– பணம் கொடுத்ததை கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். ரூபாய் 60,000/– ஆனது 01.11.2019 அன்று பிரதிவாதி எனது தாயார் ராஜேஸ்வரியிடம் இருந்து பெற்றுக்கொண்டு கடன் உறுதி சீட்டை எழுதி கொடுத்தார். 01.11.2019 ல் ரூபாய் 50,000/– யை பிரதிவாதி எனது தாயார் ராஜேஸ்வரியிடம் இருந்து பெற்றுக்கொண்டு கடன் உறுதி சீட்டை எழுதி கொடுத்தார். எனது தாயார் தற்போது உயிருடன் இல்லை. எனது தந்தை அருணாச்சலம் எனது தாயாருக்கு முன்பாகவே இறந்துவிட்டார்.

எனது பெற்றோருக்கு நான், லட்சுமிபதி மற்றும் பொண்ணையன் வாரீசுகள் நான் மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன். மூன்று நபர்கள் வாரீசுகளாக உள்ளநிலையில் நான் மட்டும் வழக்கு தாக்கல் செய்து மேற்படி பணத்தை பெற்றுக்கொள்ள எனது தாயாா் ஏதேனும் எழுதி கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. நான் மட்டும் ஏன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் வீட்டின் மூத்த மகன் என்பதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் எனது சகோதர் பொன்னையனிடம் வழக்கு தாக்கல் செய்ய அழைத்தேன் ஆனால் அவர் என்னையே வழக்கு தாக்கல் செய்யுமாறு கூறிவிட்டார். மற்றொரு சகோதரரிடம் பேச்சுவார்த்தை இல்லை என்பதால் அவரிடம் கேட்கவில்லை. இந்நிலையில் பொன்னையனை வாதியாகவும், லட்சுமிபதியை பிரதிவாதியாகவும் வழக்கில் தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும் என்றால் பொன்னையனை வழக்கில் சேர்த்திருப்பதாக வழக்கறிஞர் கூறினார். நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. எனது தாயார் தச்சூரில் உள்ள வேலம்மாள் கார்டனில் வசிக்கும் லட்சுமிபதி வீட்டிலும் என்னுடைய வீட்டிலும் வசித்து வந்தார் என்றால் சரிதான். லட்சுமிபதிக்கு உடல் நிலை சரியில்லை என்றால் அவர் வீட்டிற்கு எனது தாயார் செல்வார். கடந்த 14.11.2020 தேதியன்று லட்சுமிபதி வீட்டில் வைத்து லட்சுமிபதி முன்னிலையில் பிரதிவாதிகள் கடன் தொகை அனைத்தையும் எனது தாயாரிடம் திருப்பி கொடுத்துவிட்டார் என்றாலும் மேற்படி லட்சுமிபதியை வழக்கின் தரப்பினராக சேர்த்தால் மேற்படி உண்மை தெரிந்துவிடும் என்பதால் அவரை வழக்கில்

தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. லட்சுமிபதியை விசாரணை செய்தால் உண்மை தெரியவரும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி லட்சுமிபதியை வழக்கின் தரப்பினராக சேர்க்க பிரதிவாதி எதிர்வழக்கில் கூறியுள்ள நிலையில் அது குறித்து நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. எனது தாயாரிடம் பிரதிவாதி வாங்கிய கடன் தொகை முழுவதையும் திருப்பி கொடுத்துவிட்டு கடன் உறுதி சீட்டை கேட்டதற்கு சின்னம்பேட்டில் உள்ள தனது மகனிடம் இருப்பதாகவும் பிறகு வாங்கி கொடுப்பதாக கூறினார் என்றால் சரியல்ல. எனது தாயார் 21.01.2021 தேதியன்று சின்னம்பேட்டில் உள்ள எனது வீட்டிற்கு வந்து மறுநாளே தற்கொலை செய்து கொண்டார் என்றால் தற்கொலை செய்து கொண்டது உண்மை ஆனால் மற்ற விவரங்களை மறுக்கிறேன். எனது தாயார் தற்கொலை செய்து கொண்டதால் கடன் உறுதி சீட்டினை எனது தாயாரிடம் இருந்து பிரதிவாதியால் வாங்க இயலாமல் போயிவிட்டது என்றால் சரியல்ல. எனது தாயார் இறந்ததை பயன்படுத்திக்கொண்டு வீட்டில் இருந்த தாவா கடன் உறுதி சீட்டுக்களை பயன்படுத்தி இந்த வழக்கை பிரதிவாதி மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு ரூபாய் 60,000/– மற்றும் ரூபாய் 50,000/– பணம் கோரி இரு முறை அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். 28.01.2022 தேதியிட்ட வா.த.சா ஆ 10 அறிவிப்பில் எனக்கும் லட்சுமிபதிக்கும் மட்டுமே மேற்படி தொகையை வசூல் செய்ய உாிமை உள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

ஆனால் நான் அவ்வாறு வழக்கறிஞரிடம் கூறவில்லை. வா.த.சா ஆ 9 அறிவிப்பில் நாங்கள் மூன்று பேர் எனது தாயாருக்கு வாரீசுகள் என்றும் எங்களுக்கு மேற்படி பணத்தை வசூல் செய்ய உாிமை உள்ளது என கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் எனது வழக்குரையில் எனது தாயார் என்னை மட்டுமே நாமினியாக இந்தியன் ஓவர்சிஸ் வங்கி ஆரணி கிளையில் குறிப்பிட்டுள்ளதால் நான் மட்டுமே மேற்படி பணத்தை வசூல் செய்ய உாிமை உள்ளது என கூறியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி அவர் வாங்கிய பணத்தை திருப்பி எனது தாயாரிடம் செலுத்திவிட்டார் என்றாலும் பொய்யாக மேற்படி தொகையை பிரதிவாதியிடம் இருந்து வசூல் செய்யவேண்டும் என்பதால் தான் அறிவிப்பு மற்றும் வழக்குரையில் முன்னுக்கு பின் முரனாக சங்கதிகளை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி எனது தாயாரிடம் மொத்த கடன் தொகையும் திருப்பி கொடுத்துவிட்டார் என்றாலும், பிரதிவாதியின் மீதுள்ள முன் விரோததத்தின் காரணமாக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி உண்மையில் பணம் கொடுக்க வேண்டியிருந்தால் நாங்கள் மூவரும் சேர்ந்து மேற்படி பணத்தை கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல. எனது தாயாருக்கு நான் மற்றும் இரு சகோதரர்கள் வாரீசாக உள்ள நிலையில் எனக்கு மட்டும் தனிப்பட்ட முறையில் வழக்கை தாக்கல் செய்து பணத்தை பெற்றுக்கொள்ள எனது தாயார் அதிகாரம் அளிக்காத நிலையில் எனது சகோதரர்களை சேர்க்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்ய எனக்கு உாிமை இல்லை என்றாலும் இந்த

வழக்கு அவசிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினால் இந்து வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**